# 3 இன் 1 விவசாயம்!

முப்போக சாகுபடி கேள்விப்பட்டிருக்கோம். அதன் ஒவ்வொரு சாகுபடியிலும் முப்போக வருவாய்... அதாவது மூணு வகை வருவாய் கேள்விப்பட்டிருப்போமா? ஒவ்வொரு போக சாகுபடியின் போதும், அதில் நெல்... மீன்... கோழி என மூன்று வகை வருவாய் அடைந்து வருகின்றனர் விவசாயிகள்.



* இராம.கதிரேசன்

''நாகை, கடலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக தேசிய வேளாண் புதுமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் ஒரு அங்கமே நெல்.. மீன்... கோழி உற்பத்தி வருவாய் ஆகும். ஒரு விவசாயி தன் நேரடி உழைப்புக்களமான தனது வயலிலேயே, ஒவ்வொரு போக சாகுபடியிலும் மேற்கண்ட மூன்றையும் உற்பத்தி செய்து நிறைய வருவாய் ஈட்டிக் கொள்ள முடியும். இதற்கான செலவு மற்றும் பயிற்சிகள் போன்றவற்றை இந்திய வேளாண் ஆய்வுக்கழகம் வழங்குகிறது. அதற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புலம் உழவியல் துறை வழிகாட்டி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் நானூறு குறு விவசாயிகள் தங்களின் விளைநிலங்களில் முழுமூச்சாக மூணு வகை வருவாய் இலாபம் பெற்று வருகின்றனர்!'' எனச் சொல்கிறார் உழவியல் துறைத் தலைவரும், முதுமுனைவருமான இராம.கதிரேசன்.



விவசாயிகளுக்கு இது சாத்தியமாகிறதா? நெல்... மீன்... கோழி என மூன்றிலுமே நிறைவான உற்பத்தியும், மிகுந்த இலாபமும் கிடைக்கிறதா? ஒன்று உயர்ந்து இன்னொன்று குறைந்து விடுகிறதா? அல்லது மற்றொன்று ஊத்தி மூடி விடுகிறதா? இத்தனை கேள்விகளுக்கும் பதில் தேடி, சுற்றி அலைந்தோம்.

வயல்களில் ஆங்காங்கே புறாக் கூடுகள் போலத் தெரிந்தன தூரத்துப் பார்வைக்கு. அட... அருகே சென்றால் அத்தனையும் கோழிக் கூடுகள். அதிலிருந்து கீழே நீளமாக ஆழம் குறைவான பள்ளம். துள்ளிக் குதிக்கும் மீன்கள். பள்ளத்திலிருந்து பாய்ந்தேறி வயலுக்குள் நீந்தி பின்னர் பள்ளத்தின் ஆழத்தில் பதுங்கும் வளர்ப்பு மீன்கள். நெல்.. மீன்... கோழி உற்பத்திச் செயல் திட்டம் இதுதான்.

ஐந்து சென்ட் வயலுக்கு ஒரு கோழிக் கூடு. ஒரு மீன் வளர்ப்புக் குட்டை. மூன்றடி ஆழம், மூன்றடி அகலம், இருபதடி நீளம் இதுவே அந்தக் குட்டை. எப்போதும் நீர் நிறைந்திருக்க வேண்டும். அக் குட்டையின் விளிம்பில், நாலடி உயரத்தில் கல்



தூண்கள் ஊன்றப்பட்டு அதன் மீது கோழிக் கூடு. அத்தனையும் பிராய்லர் கோழி.

''ஒரு கூடுக்கு இருபது கோழிக் குஞ்சு தர்றாங்க. பத்து நாள் குஞ்சு. கோழித் தீவனமும் தந்துடுறாங்க. நாம அதுக்கு ஆயிரத்தைநூறு ரூவா தரணும். தீனி போட்டு வர்ற முப்பது நாள்ல கோழி பெருசா வளர்ந்துடும். அதுபோல மீன் குஞ்சு தருவாங்க. அவற்றைக் குட்டைகள்ல வுட்டு வளர்க்கணும். அஞ்சு மாசத்துல ஐம்பது அறுவது கிலோ மீன் கெடைக்கும். கோழி வளர்க்கிறோம், மீன் வளர்க்கிறோம் இதனால வேறென்ன பயன்? வேறென்ன இலாபம்னு கேக்குறீங்களா?

ரெண்டுமே நெறைய இருக்கு. தினசரி கோழி போடுற எச்சம், அதனோட கூட்டுக்குக் கீழே விழுந்து மீன்களுக்கும் உணவாகுது. நெல்லுக்கும் உரமாகுது. மீன்கள் வயல் உள்ளே பூந்து பூந்து நீந்தி வர்றதால பயிர்களுக்கு நல்ல காற்றோட்டம் கெடைக்குது. மீன் குட்டையில நாங்க வளர்க்குற கட்லா, ரோகு, மிர்கால் வகை மீன்கள் பூச்சிகளைத் தின்பவை ஆகும். புல் கெண்டை மீன்கள் வயலில் உள்ள களைகளைத் தின்னும் பழக்கம் உடையவை. இவைகளினால் என் வயலுக்குச் செயற்கை உரம் ஏதுமே இடுவதில்லை. அதுவே எனக்குப் பெரும் லாபம் அல்லவா?'' என்கிறார் சிதம்பரத்திலிருந்து இருபது கி.மீ. தூரத்தில் உள்ள வெள்ளியங்குடி கிராம விவசாயி இராமமூர்த்தி.

* இராமமூர்த்தி



**- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**